# அரசு கலைக் கல்லூரி

## தருமபுரி – 636 705

(தேசிய தர மதிப்பீட்டில் B++ தரச்சான்று பெற்றது)

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது

**நாள் : 05.09.2022**

## மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு

## உயர்கல்வி உறுதித்திட்டம் தொடக்கவிழா

### புதுமைப்பெண்

**தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித் திட்டம் (புதுமைப்பெண் திட்டம்**) உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/- நிதி உதவி வழங்கும் திட்டத் தொடக்கவிழா, **தமிழக முதல்வர்** மாண்புமிகு **திரு. மு. க. ஸ்டாலின்** மற்றும் **டெல்லி மாநில முதல்வர் மாண்புமிகு திரு. அரவிந்த் கெஜ்ரிவால்** அவர்களால், சென்னையில் காலை 10.00 மணி அளவில் தொடங்கப்பட்டதை தொடர்ந்து, தருமபுரி மாவட்ட பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கும் விழா தருமபுரி அரசு கலைக் கல்லூரி கலையரங்கத்தில் காலை 11.00 மணி அளவில் நடைபெற்றது.

இவ்விழாவில், **சித்ரா விஜயன் இஆப., சார் ஆட்சியர்**, தருமபுரி அவர்கள் வரவேற்புரை நிகழ்தினார். **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி இஆப.**, அவர்கள் தலைமையேற்று கல்லூரி பயிலும் மாணவியர்களுக்கு நிதி உதவி வழங்கி விழா பேருரை ஆற்றினார்.

**தருமபுரி அரசு கலைக் கல்லூரி**, **முதல்வர் முனைவர். ப. கி. கிள்ளிவளவன்** அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

**தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்**, **தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.வெங்கடேஷ்வரன், மற்றும் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே.மணி** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இவ்விழாவில், **மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கண்ணன் அவர்கள்**, **தருமபுரி மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி. ம.யசோதா** அவர்கள், **நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. பெ.மகேஸ்வரி** அவர்கள்,

**தருமபுரி நகர்மன்றத் தலைவர் திருமதி.மா.லட்சுமி** அவர்கள், **மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திருமதி. ச.மாது** அவர்கள், **நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி. மு.பரமேஷ்வரி** அவர்கள், , **தடங்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. மு.கவிதா** அவர்கள் கலந்துகொண்டனர்.

**மாவட்ட சமூக நல அலுவலர்** (பொ) **மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மாவட்ட திட்ட அலுவலருமான திருமதி.வி.ஜான்சிராணி** அவர்கள் விழாவின் நன்றியுரை ஆற்றினார்.

இவ்விழாவின் **தருமபுரி அரசு கலைக்கல்லூரி ஒருங்கிணைப்பாளராக** நம் கல்லூரியின் கணினி அறிவியல் துறை **உதவி பேராசிரியர் முனைவர். பெ.கௌதமராயதிருமால்** அவர்கள் செயல்பட்டார். மேலும் இவ்விழாவின் பயனாளிகளாகிய மாணவிகளுக்கு தேவையான **வழிமுறைகள் மற்றும் ஏற்பாடுகளை கல்லூரியின் கௌரவ விரிவுரையாளர்கள் மேற்கொண்டனர்**.

இவ்விழாவில் தருமபுரி அரசு கலைக்கல்லூரியை சார்ந்த 346 மாணவிகள் உட்பட தருமபுரி சுற்றுப்பகுதியை சேர்ந்த பிற கல்லூரிகளை சேர்ந்த 625 மாணவிகளுக்கு முதல்கட்டமாக நிதி உதவி வழங்கப்பட்டது.

Government Arts College, Dharmapuri First Phase Beneficiaries Details: (visit the following link)

http://www.gacdpi.ac.in/Documents/Events/moovalur/function/beneficiarydetails.pdf






சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை
தருமபுரி மாவட்டம்


K.மாணிக்கம்
தருமபுரி


சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித்திட்டம்
மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/ உதவித்தொகை
வழங்கும் விழா
K.மானிக்கம்
தருமபுரி


சமூக நலன்
மாண்புமிகு


தருமபுரி மாவட்டம்
ஆணைக்கிணங்க


மாணிக்கம்


K.மாணிக்கம்
தருமபுரி


கலையரங்கம்
தமிழ்நாடு முதலமைச்சர்